தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

புதன்கிழமை, 1974 ஏப்ரல் 24

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் பிரமாணம் அல்லது உறுதிமொழி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. வே. தங்கப்பாண்டியனை உறுதி மொழி எடுத்துக்கொள்ள அழைத்தார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் தமிழில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசின் தீர்மானங்கள்

(1) வினா நேரம் கைவிடப்படுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

என்று முன்மொழிகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவரவர்களே, கேள்வி நேரம் இன்று ஏன் கைவிடப்படுகிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாநில சுயாட்சி பற்றிய விவாதங்கள், இரண்டு மூன்று நாட்களில் குறிப்பிட்ட அளவுக்கு முடிந்துவிட வேண்டுமென்ற காரணத்தால், நம்முடைய நண்பர் திரு. சுவாமி நாதன் போன்றவர்கள் நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் கேள்வி நேரம் கைவிடப்படுகிறது. இதுபற்றி நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை:—

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.